# காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

(மத்திய கல்வி அமைச்சகத்தின் நேரடி நிறுவனம்)

தேசிய தர மதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் (நான்காவது சுற்று) ‘A++’ தகுதி பெற்றது

## காந்திகிராமம் - 624 302

நாள்: 30.10.2026

**ஒத்திகை : காலை 09.30 மணி** **பட்டமளிப்பு விழா : முற்பகல் 11.30 மணி**

**பட்டம் பெறுவோர் கவனத்திற்கு**

அன்புடையீர்,

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழத்தின் 39–ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2026–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ஆம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு, பல்கலைக்கழகப் பல்நோக்கு அரங்கில் நடைபெற உள்ளது. இதில் தாங்கள் கலந்துகொண்டு பட்டத்தை நேரில் பெறுவதற்கு (in person) விண்ணப்பித்துள்ளதால் தங்களது வருகையை எதிர்நோக்குகிறோம். விழாவின்போது தாங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்தச் சுற்றறிக்கையைத் தாங்கள் விழாவிற்கு வரும்பொழுது அவசியம் உடன் கொண்டுவருதல் வேண்டும்.

1. இந்தப் பட்டமளிப்பு விழாவில் நேரில் (in person) பட்டம் பெற விண்ணப்பித்தோர் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
2. 2025-2026–ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற இறுதித் தேர்வில் தேர்ச்சிபெற்றோர் மட்டுமே விழாவில் கலந்துகொள்ளமுடியும்.
3. **பட்டமளிப்பு விழா அன்று காலை 9.30 மணி அளவில் நடைபெறும் ஒத்திகையில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். தவறினால் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள அனுமதி இல்லை.**
4. **பட்டமளிப்பு விழாவில் அணியும் சால்வையைத் தங்கள் துறைத்தலைவரிடமிருந்து 30.10.2026 அன்று காலை 09.00 மணி அளவில் பெற்றுக்கொள்ளலாம்.**
5. பல்கலைக்கழகப் பல்நோக்கு அரங்கில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நிகழ்ச்சி துவங்குவதற்கு ஒருமணி நேரம் முன்னதாகவே வந்து அமர வேண்டும்.
6. இருக்கையில் அமர்ந்த பின்னர் விழா முடியும்வரை அவையின் அமைதி, கண்ணியத்தைக் காப்பது மிகவும் அவசியம்.
7. அலைபேசியை அரங்கத்தினுள் கொண்டுவர அனுமதி இல்லை.
8. நிகழ்ச்சியின் இடையில் எழுந்து நிற்கவோ, வெளியில் செல்லவோ, புகைப்படம் எடுக்கவோ அனுமதி இல்லை.
9. சிறப்பு விருந்தினர்களும், பல்கலைக்கழக வேந்தர், பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினரும், திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் மற்றும் புலத்தலைவர்களும் அரங்கிற்குள் வரும்பொழுது பட்டம் பெறுவோரும் பிற அழைப்பாளர்களும் எழுந்து நிற்கவேண்டும். ஊர்வலத்தின்போது, பல்கலைக்கழகப் பாடலான “அறிவாலயத்துள் வருக” இசைக்கப்படும். பேரணி மேடையை வந்தடைந்ததும், தேசியப் பாடல், தேசிய கீதம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்.
10. துணைவேந்தர் வரவேற்புரையையும், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் சமர்ப்பிப்பார்.
11. வேந்தர் அவர்கள் “வேந்தர் உரை” நிகழ்த்துவார்.
12. வேந்தர் பட்டமளிப்பு விழாவைத் தொடங்கி வைத்து, விழாவை அதிகாரப்பூர்வமாகத் தொடங்குவதாக அறிவிப்பார். அப்போது வேந்தர் பின்வருமாறு கூறுவார்:

“This convocation of Gandhigram Rural Institute has been called to confer Degrees upon and issue Diplomas / Certificates to the candidates who passed the examinations held in 2025-2026 for this purpose and have been certified to be worthy of the same.”

13. பட்டமளிப்பு

பட்டம் பெறுவோர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டும்

பட்டம் பெறுவோரிடம் வேந்தர் கீழ்க்காணுமாறு கூறுவார்:

“By virtue of the authority vested in me as the Chancellor of GRI, I confer on you and issue the Degree, Diploma and Certificate for which you have been declared eligible.”

14. உறுதிமொழி எடுத்தல்

வேந்தர் “Let the candidates stand” என்று கூறும்பொழுது பட்டம் பெறுவோர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டும். தொடர்ந்து பின்வரும் வினாவை எழுப்புவார்:

Do you solemnly promise and declare that as holders of Degree/Diploma/Certificate it will be your utmost endeavour to prove yourselves worthy of this Institute

i) by promoting and supporting a casteless and classless society through non-violent means and

ii) by working for integrated rural development and for a social order conducive to the well-being of your fellow human beings?

பட்டம் பெறுவோர் “I do promise” என விடை அளிக்க வேண்டும்.

15. வேந்தர் அவர்கள் “பட்டம் பெறும் மாணவர்களே” தயவுசெய்து அமரவும் என்று கூறுவார்.

16. சிறப்பு விருந்தினர் பட்டமளிப்பு உரையை நிகழ்த்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு மட்டும் தங்கப் பதக்கங்களை வழங்குவார்.

17. அனைவரும் இணைந்து போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்க வேண்டும். (வாசிக்கப்படும் உறுதிமொழியை அனைவரும் தங்களது வலது கையை முன்னோக்கி நீட்டியவாறு திரும்பக் கூற வேண்டும்.)

18. தேசியப் பாடல் மற்றும் தேசிய கீதம் இசைக்கப்படும்போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

19. விருந்தினர்கள் அரங்கத்தை விட்டு வெளியேறும் வரை அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

20. விருந்தினர்கள் அரங்கத்திலிருந்து சென்ற பின் கீழ்க்காணும் வரிசையில் பட்டம் பெறுவோர் வேந்தருக்கு அறிமுகப்படுத்தப்படுவர்.

| Sl. No. | Degrees/Diplomas/Certificates | Presenting Officers |
|---|---|---|
| 1. | Ph.D. | Dr.P.Balasubramaniam<br>Dean, School of Sciences |
| 2. | M.Sc. | Dr.R.Venkataravi<br>Dean, School of Health Science & Rural Development |
| 3. | MCA, M.Tech. & B.Tech. | Dr.P.Kalavathi<br>Dean, School of Computer Science & Technologies |
| 4. | M.A. | Dr.K.S.Nakkeran<br>Dean, School of Social Sciences |
| 5. | MBA, M.Com., B.A., BBA, & B.Com. | Dr.B.Tamilmani<br>Dean, School of Management Studies |
| 6. | M.Ed. & P.G.Diploma | Dr.S.Balasundari<br>Dean, School of English & Foreign Languages |
| 7. | B.Sc., & B.Sc. B.Ed | Dr.A.Ramanathan<br>Dean, School of Agriculture & Animal Sciences |
| 8. | B.Ed., B.Voc., D.Voc., Diploma & Certificate | Dr.P.Anandakumar<br>Dean, School of Tamil & Indian Languages |

21. பல்கலைக்கழக வேந்தர் / சிறப்புவிருந்தினர் முனைவர் பட்டம் / தங்கப் பதக்கங்களை வழங்குவர் (பதிவாளர் பெயர்ப்பட்டியலை அறிவிப்பார்).

22. ஆனைத்து பட்டசான்றிதழ் பெறுவோர் பெயர்பட்டியலை புலத்தலைவர்கள் அறிவிப்பார்கள் தொடர்ந்து மாணவாகள் மேடைக்கு சென்று பட்ட சான்றிதழ்களை பெற்று கொள்ளலாம்.

23. பட்டங்கள் வழங்கி முடிக்கப்பட்ட பின்னர், வேந்தர் "I dissolve the Convocation" என்று அறிவிப்பார்.

24. இறுதியாக, தேசியப் பாடலும் தேசிய கீதமும் இசைக்கப்படும்.

25. பல்கலைக்கழக வேந்தர், சிறப்பு விருந்தினர், துணைவேந்தர், நிர்வாக்குழு உறுப்பினர்கள், திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் புலத்தலைவர்கள் அரங்கத்தை விட்டு வெளியே செல்லும்வரை அரங்கத்தில் உள்ள அனைவரும் எழுந்து நிற்கவேண்டும். விருந்தினர்கள் அவையை விட்டு வெளியேறிய பின்னரே, அவையில் உள்ளோர் கலைந்து செல்லுதல் வேண்டும்.

26. விழா நாளன்று தங்களுக்கும் தங்கள் பெற்றோர்களுக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

27. காலை 9.30 மணிக்கு நடைபெறும் ஒத்திகைக்கும், பின்பு முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவிற்கும் தங்களின் வருகையை எதிர்நோக்குகிறோம். விழா இனிதே நடைபெற தங்களது ஒத்துழைப்பினைக் கோருகிறோம்.

**பதிவாளர்**
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்